**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**
**வட்டாட்சியர் அலுவலகம், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்**

அறிவிக்கை எண்.அ1/2595/2025 நாள்: 08.08.2025.

இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகில், இராமேஸ்வரம் வருவாய் வட்டத்தில் காலியாக உள்ள ஒரு (1) கிராம உதவியாளர் பணியிடத்தை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்ட தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 08.08.2025 |
| விண்ணப்பங்கள் சமர்பிப்பதற்கான கடைசி நாள் | 07.09.2025 |
| வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித் தேர்வு | 08.10.2025 |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | 23.10.2025 |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| பணி விதிகள் | தமிழ்நாடு கிராம உதவியாளர் பணி விதிகள் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம்<br>(ரூ.11,100/- ரூ. 35,100/-) |
| வட்டத்தின் பெயர் | இராமேஸ்வரம் |
| நிரப்பப்பட உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | 01 |

| வ.எண் | நிரப்பப்பட உள்ள கிராமத்தின் பெயர் | இன சுழற்சி எண் | இனசுழற்சி விபரம் |
|---|---|---|---|
| 01 | பாம்பன் | 02 | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) (பெண்)<br>(ஆதரவற்ற விதவை) முன்னுரிமை பெற்றவர் |

**கல்வித்தகுதி:**

தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC - Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். {குறிப்பு - SSLC (Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்பிக்க வேண்டும்}.(குறைந்தபட்ச கல்வி தகுதி பத்தாம் வகுப்பு தோல்வி)

**வயது வரம்பு:**

| | |
|---|---|
| வயது வரம்பு | SC(A) |
| அதிகபட்ச வயது | 37 |
| குறைந்தபட்ச வயது | 21 |
| வயது குறித்து தகுதி ஏற்படுத்தும் தேதி | 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும். |
| அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள்:13.09.2021-ன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. | |

**இதர தகுதிகள்:**

- விண்ணப்பதாரர்கள் இராமேஸ்வரம் வட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- தமிழில் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
- கிராம உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக, அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.312, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி 8(1) ) துறை, நாள்:04.06.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய கல்வித்தகுதி, மிதிவண்டி/இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம் (Native Resident) நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப்பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.
- இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுனர் உரிமம் வைத்திருப்பின் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியாக தேர்வு நடத்தப்படமாட்டாது. மாறாக இருசக்கர வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை எனில் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியே தேர்வு நடத்தப்படும்.
- பணி நியமனத்தின்போது உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- இருதார மனைவி உடையவர்களாக இருக்கக் கூடாது மற்றும் வேறு கணவர் மனைவி உயிருடன் உள்ள ஒருவரை திருமணம் செய்திருக்கக் கூடாது.
- பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- நேர்முகத் தேர்வின் போதும் சான்றுகள் சரிபார்ப்பின் போதும் அசல் சான்றுகள்/ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை https://ramanathapuram.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமீபத்திய புகைப்படத்தினை (கடவுச் சீட்டு அளவு) விண்ணப்பத்தில் ஒட்டி உரிய ஆவணங்களுடன் இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 07.09.2025 அன்று மாலை 05:45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

வருவாய் வட்டாட்சியர்,
இராமேஸ்வரம்.